ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

**நம்மாழ்வார் அருளிச் செய்த**
**திருவாய்மொழி**
**ஆறாம் பத்து**
**ஶரண்யனான ஶ்ரிய:பதியின் திருவடிகளிலே ப்ரேமத்தினால் சரணம் புகுதல்**

**முதல் திருவாய்மொழி - வைகல்பூங்கழி**
**தலைவி திருவண்வண்டூரில் உறையும் சக்ரவர்த்தித்**
**திருமகனிடம் காதலாலே பக்ஷிகளைத் தூது விடுதல்**

** வைகல் பூங்கழி வாய் * வந்து மேயும் குருகு இனங்காள்! *
செய் கொள் செந்நெல் உயர் * திருவண்வண்டூர் உறையும் **
கை கொள் சக்கரத்து * என் கனி வாய் பெருமானைக் கண்டு *
கைகள் கூப்பிச் சொல்லீர் * வினையாட்டியேன் காதன்மையே 1

காதல் மென் பெடையோடு * உடன் மேயும் கரு நாராய்! *
வேத வேள்வி ஒலி முழங்கும் * தண் திருவண்வண்டூர் **
நாதன் ஞாலம் எல்லாம் உண்ட * நம்பெருமானைக் கண்டு *
பாதம் கை தொழுது பணியீர் * அடியேன் திறமே 2

திறங்கள் ஆகி எங்கும் * செய்களூடு உழல் புள் இனங்காள்! *
சிறந்த செல்வம் மல்கு * திருவண்வண்டூர் உறையும் **
கறங்கு சக்கரக் கைக் * கனி வாய்ப் பெருமானைக் கண்டு *
இறங்கி நீர் தொழுது பணியீர் * அடியேன் இடரே 3

இடரில் போகம் மூழ்கி * இணைந்தாடும் மட அன்னங்காள்! *
விடலில் வேத ஒலி முழங்கும் * தண் திருவண்வண்டூர் **
கடலின் மேனிப் பிரான் * கண்ணனை நெடுமாலைக் கண்டு *
உடலம் நைந்து ஒருத்தி * உருகும் என்று உணர்த்துமினே 4

உணர்த்தல் ஊடல் உணர்ந்து * உடன் மேயும் மட அன்னங்காள்! *
திணர்த்த வண்டல்கள் மேல் * சங்கு சேரும் திருவண்வண்டூர் **
புணர்த்த பூந்தண் துழாய் முடி * நம் பெருமானைக் கண்டு *
புணர்த்த கையினராய் * அடியேனுக்கும் போற்றுமினே 5

போற்றி யான் இரந்தேன் * புன்னை மேல் உறை பூங்குயில்காள்! *
சேற்றில் வாளை துள்ளும் * திருவண்வண்டூர் உறையும் **
ஆற்றல் ஆழி அங்கை * அமரர் பெருமானைக் கண்டு *
மாற்றம் கொண்டு அருளீர் * மையல் தீர்வது ஒரு வண்ணமே 6

ஒரு வண்ணம் சென்று புக்கு * எனக்கு ஒன்று உரை ஒண்கிளியே! *
செரு ஒண்பூம்பொழில் சூழ் * செக்கர் வேலைத் திருவண்வண்டூர் **
கரு வண்ணம் செய்ய வாய் * செய்ய கண் செய்ய கை செய்ய கால் *
செரு ஒண்சக்கரம் சங்கு * அடையாளம் திருந்தக் கண்டே 7

திருந்தக் கண்டு எனக்கு ஒன்று உரையாய் * ஒண்சிறு பூவாய்! *
செருந்தி ஞாழல் மகிழ் * புன்னை சூழ் தண்திருவண்வண்டூர் **
பெருந்தண் தாமரைக் கண் * பெரு நீள் முடி நால் தடந்தோள் *
கருந்திண் மா முகில் போல் * திரு மேனி அடிகளையே 8

அடிகள் கை தொழுது * அலர் மேல் அசையும் அன்னங்காள்! *
விடிவை சங்கு ஒலிக்கும் * திருவண்வண்டூர் உறையும் **
கடிய மாயன் தன்னைக் * கண்ணனை நெடுமாலைக் கண்டு *
கொடிய வல்வினையேன் * திறம் கூறுமின் வேறு கொண்டே 9

வேறு கொண்டு உம்மை யான் இரந்தேன் * வெறி வண்டு இனங்காள்! *
தேறு நீர்ப் பம்பை * வடபாலைத் திருவண்வண்டூர் **
மாறில் போர் அரக்கன் * மதிள் நீறெழச் செற்று உகந்த *
ஏறு சேவகனார்க்கு * என்னையும் உளள் என்மின்களே 10

** மின்கொள் சேர் புரிநூல் குறளாய் * அகல் ஞாலம் கொண்ட *
வன்கள்வன் அடி மேல் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
பண்கொள் ஆயிரத்துள் இவை பத்தும் * திருவண்வண்டூர்க்கு *
இன்கொள் பாடல் வல்லார் * மதனர் மின் இடையவர்க்கே 11

**அடிவரவு:** வைகல் காதல் திறம் இடர் உணர்த்த போற்றி ஒரு திருந்த அடி வேறு மின்கொள் மின்னிடை

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---